2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள், வினா எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

121—

குறைந்த மின்னழுத்தம்

***504—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் குறைந்த மின்னழுத்தம் உள்ள நிலைமையினை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இப்பகுதியில் உள்ள துணை மின் நிலையத்திற்கு மின்சாரம் வழங்கி வரும் வாய்மேடு துணை மின் நிலையம், தற்போதுள்ள 66/11 கிலோ வோல்ட்டிலிருந்து 110 கிலோ வோல்ட்டாக உயர்த்தப்படவுள்ளது. அதற்கான பணிகள் முடிவடைந்து, பயன்பாட்டிற்கு வந்ததும், குறைந்த மின்னழுத்தம் சரி செய்யப்பட்டுவிடும்.

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த வாரம் இது சம்பந்தமாகக் கேள்வி கேட்டிருந்தேன். அப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாகச் சரி செய்யப்பட்டுவிடும் என்று சொல்லியிருந்தார்கள். அதன் அடிப்படையிலே அன்று மாலையே மின்சாரத் துறையைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர் தலைமையிலே ஒரு குழு வந்து அந்த இடங்களையெல்லாம் பார்வையிட்டு உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கும், அதேபோல, ஏற்கெனவே அங்கிருக்கின்ற துணை மின் நிலையத்தினுடைய சக்தியை அதிகரிப்பதற்கும் உரிய ஏற்பாடுகளையெல்லாம்

2007 ஏப்ரல் 24]

செய்துகொண்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பணிகளை விரைந்து முடிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல, அவர் கேள்வி கேட்டவுடனே அதிகாரிகளை அங்கு அனுப்பி, அந்தப் பணிகளை வேகப்படுத்தி, இப்பொழுது 70 சதவிகிதப் பணிகள் முடிவடைந்து இருக்கின்றன. மற்ற பணிகள் யாவும் வருகின்ற 31-8-2007-க்குள் முடிக்கப்பட்டுவிடும். அதற்குப் பிறகு அந்த இடத்திலே தாழ்வழுத்த மின்சாரம் நிச்சயமாக இருக்காது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.*

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலையில் 110 கிலோ வோல்ட் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டவுடன் ஒவ்வோர் ஆண்டும் 60 துணை மின் நிலையங்களைத் தமிழ்நாட்டிலே அமைத்து, தமிழகத்திலே எங்கேயும் தாழ்வான மின்னழுத்தம்*

இல்லை என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக 325 துணை மின் நிலையங்களைத் தமிழகத்திலே அமைக்க முடிவு எடுத்து, அதற்காக 2,000 கோடி ரூபாய் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் படிப்படியாகத் தொடங்கி முடிக்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய குளித்தலை தொகுதியிலேயும் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுகா, ஜமுனாமரத்தூர், மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. சுமார் 85 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். அங்கே, குறைந்த மின் அழுத்தம் காரணமாக டியூப் லைட்டுகள் எரிவதே கிடையாது. குண்டு பல்புகள்தான் அங்கே எரிகின்றன. எனவே, அங்கே நீண்ட நாட்களாகத் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரமே ஜவ்வாது மலையிலே ஒரு துணை மின் நிலையம் அமைப்பது குறித்து நான் இந்த அவையிலே சொல்லியிருக்கின்றேன். ஏற்கெனவே இந்த அவையிலே குறிப்பிட்டதைப்போல, ஜவ்வாது மலையிலே அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, வீரபாண்டி ஊராட்சியிலுள்ள வீரபாண்டி, வீரபாண்டிபுதூர், அறிவொளி நகர், அண்ணா நகர் ஆகிய பகுதிகளிலே குறைந்த மின் அழுத்தம் உள்ளதாக அறிந்து, அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டு, அந்த

2007 ஏப்ரல் 24]

ஆய்வுப் பணிகள் முடிவுற்ற நிலையிலே இருக்கின்றன. அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுகள் முடிவுற்று இருக்குமானால், துணை மின் நிலையம் விரைவில் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலேயே காற்றாலைகள்மூலம் மின்சாரம் தமிழகத்திலேதான் அதிகமாக எடுக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து அதிகமாக உற்பத்திச் செய்யப்படுகிறது. காற்றாலை மின்சாரத்தைக் கொண்டு செல்கின்ற மின் பாதை--Grid குறைவாக இருக்கின்ற காரணத்தால், மிக அதிகமான மின் காற்றாலைகள் நிறுவப்பட்டும், நாளொன்றுக்கு 24 மணி நேரத்திற்குப் பதிலாக, 10 மணி, 12 மணி நேரம் அவை ஓடுகின்றன. மீதி நேரம் அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை எடுத்துச் செல்ல மின் பாதை இல்லாத காரணத்தால் நிறுத்தப்படுவதாக அறிகிறேன். ஆகவே, அந்தக் காற்றாலைகள் எல்லாம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை முழுமையாக மின் பாதைமூலம்--Grid மூலம் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் தெரிவித்ததைப்போல, காற்றாலைமூலமாக உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தைக் கொண்டு செல்லும் பாதை--Grid, அதனுடைய சக்தியை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று Power Grid Corporation-க்கு நாம் கடிதம் எழுதியிருக்கின்றோம். Power Grid Corporation தமிழகத்திலிருந்து மற்ற மாநிலங்களை இணைப்பதற்காக சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்றும், அதற்கு

முதல் கட்டமாக 5 ஆயிரம் கோடி ரூபாய் வரையிலே மத்திய அரசு உதவி செய்யும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கிடையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தோடு தனியார் ஒப்பந்தம் போட்டு அதற்குத் தேவையான பணத்தை மிச்சம் உள்ள 5 ஆயிரம் கோடி ரூபாயை நாங்கள் தருகிறோம், மின்சார வாரியத்தோடு இணைந்து செய்வதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, விரைவிலே முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலுள்ள, ஜோலார்பேட்டையிலே குறைந்த மின் அழுத்தம் இருக்கின்ற காரணத்தினாலே 2001 ஆம் ஆண்டு ஒரு துணை மின் நிலையம் அமைக்க ரூபாய் 3 கோடி நிதி வாரியத்தால் ஒதுக்கப்பட்டு, இதுவரை நிலம் ஆர்ஜிதம் செய்யப்படாமலும், பிறகு இரயில்வே துறையிடம் இடத்தைக் கேட்டும், அவர்களும் வழங்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே, அந்தத் துணை மின் நிலையப் பணி நிறைவேற்றப்படாமல் அப்படியே கிடப்பிலே கிடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்து, நிலத்தை ஆர்ஜிதம் செய்து, துணை மின் நிலையம் அமைத்துத்தர ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் தமிழகத்திலே எங்கெல்லாம் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று கருதுகின்றதோ அங்கெல்லாம் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்புதல்கள் தரப்பட்டுள்ளன. அதற்குத் தேவையான பணத்தையும் Rural Electrification Corporation கொடுத்திருக்கிறது. ஆனால், பல இடங்களிலே இடம் கிடைக்கவில்லை. அதற்காக என்னுடைய தலைமையிலேயே தமிழகத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர், இப்படிப்பட்ட அதிகாரிகளைக்கொண்ட ஒரு கூட்டம் நடத்தி ஆய்வு செய்தபோது, சென்னை மாநகரத்திலே

2007 ஏப்ரல் 24]

இருக்கக்கூடிய ஆணையர் மட்டும்தான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலத்தை இலவசமாகவே கொடுப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.

முற்பகல் 9-40

அறநிலையத் துறையைச் சேர்ந்தவர்கள், guideline value அல்லது market value, இந்த இரண்டில் எது அதிகமோ, அந்த விலை கொடுப்பதாக இருந்தால், அவர்கள் அந்த நிலத்தைக் கொடுப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையில் எங்கேயாவது அரசாங்க நிலம் இருந்தால் அதை நாங்கள் உடனடியாகக் கொடுக்க முடியும் என்றும், நிலம் இல்லையென்று சொன்னால் தனியாரிடத்திலேயிருந்துதான் வாங்கித் தர வேண்டுமென்றும் சொல்லி இருக்கிறார்கள். எனவே, நிலம் வாங்கித் தருவதிலேதான் பிரச்சினை இருக்கிறதே தவிர, துணை மின் நிலையம் அமைப்பதிலே எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

122—

உழவர் சந்தை

***989—திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதியில் பரமத்தி, தென்னிலை, சின்னதாராபுரம், தாந்தோணி, அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி ஆகிய ஊர்களில் உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை மற்றும் வேலாயுதம்பாளையம் ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள்